## சென்னை மாநகர் போக்குவரத்துக் கழகம் சார்பில்

# “பேருந்துகளுக்கு முன்னுரிமை (BUS FIRST)” எனும் பிரச்சாரம்’!

## துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் தொடங்கி வைத்தார்!

சென்னை, நவ.23-

**தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் 21.11.2025 அன்று சென்னை அண்ணா சதுக்கம் பேருந்து முனையத்தில், மாநகர் போக்குவரத்து கழகத்தின் சார்பில் நடைபெற்ற “பேருந்துகளுக்கு முன்னுரிமை (BUS FIRST)” என்ற பிரச்சாரத்தை தொடங்கி வைத்தார்.**

இந்நிகழ்ச்சியில் தமிழ்நாடு துணை முதலமைச்சர் அவர்கள் மாநகர் போக்குவரத்துக் கழகப் பேருந்துகளின் பரிணாம வளர்ச்சி மற்றும் சாதனைகளை மக்களுக்கு காட்சிப்படுத்தும் வகையில் வடிவமைக்கப்பட்ட நடமாடும் பேருந்து கண்காட்சியை திறந்து வைத்து பார்வையிட்டு, கண்காட்சி பேருந்து சென்னை மாநகர் முழுவதும் உலா வரும் நிகழ்ச்சியை தொடங்கி வைத்தார்.

மேலும், இன்றைய நிகழ்ச்சியில் மாநகர் போக்குவரத்துக் கழகத்தின் சார்பில், “சென்னை தினம்” கொண்டாட்டத்தின் அங்கமான அரசுப் பள்ளி மாணவர்களுக்கான ஓவியப் போட்டி, அனைவருக்குமான கவிதைப் போட்டி (மாநகர் பேருந்து பயணம்), புகைப்படப்போட்டி (என் பயணம், என் கதை) மற்றும் புதையல் வேட்டை உள்ளிட்ட போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கு தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் பரிசுகளை வழங்கினார்.

1972-ஆம் ஆண்டு நிறுவப்பட்ட மாநகர் போக்குவரத்துக் கழகம் (MTC), இந்தியாவின் மிகப்பெரிய பொதுப் போக்குவரத்து நிறுவனங்களில் ஒன்றாகும். தமிழ்நாடு அரசின் போக்குவரத்துத் துறையின் கீழ் செயல்படும் மாநகர் போக்குவரத்துக் கழகம், சென்னை மற்றும் அதன் புறநகரப் பகுதிகளில், விரிவான பேருந்து வலையமைப்பு மூலம் தினந்தோறும் சுமார் 34.10 லட்சம் பயணிகளுக்கு சேவை செய்கிறது. சென்னை மக்களின் தேவைக்கு ஏற்ப முழுமையான நகர்ப்புற பேருந்துகள் இயக்கத்தை வழங்குவதில் முக்கிய பங்கு வகிக்கிறது.

சென்னையில் பொதுப் போக்குவரத்தை முன்னிலைப்படுத்தி, பொது மக்களின் பயன்பாட்டை ஊக்குவிக்கும் விதமாக மாநகர் போக்குவரத்து கழகத்தின் சார்பில் “பேருந்துகளுக்கு முன்னுரிமை (BUS FIRST)” பிரச்சாரத்தின் சிறப்பு அம்சங்களான குறித்த நேரத்தில் செல்ல வேண்டிய இடத்தை அடைதல், தடைகள் மற்றும் நெரிசல் அற்ற பேருந்து பயணம், குறைந்த உமிழ்வு போன்ற பேருந்து போக்குவரத்து சார்ந்த இயக்கத்தின் நன்மைகள் குறித்த விழிப்புணர்வை பொது மக்களிடம் ஏற்படுத்தும் ஒரு முயற்சியே இந்த பிரச்சாரத்தின் நோக்கமாகும்.

அதே நேரத்தில், அனைத்து வழித்தடங்களிலும் மாநகர் போக்குவரத்துக் கழகப் பேருந்துகள் இயக்கத்திற்கு முன்னுரிமை அளிக்க வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்துகின்ற இந்த முயற்சியின் மூலம், பொது மக்கள் பைக், கார் உள்ளிட்ட தனியார் வாகனங்களை தவிர்த்து பொதுப்போக்குவரத்தை பேருந்துகளில் பயணம் மேற்கொள்ளவதன் மூலம் ஊக்குவிப்பதையும், தூய்மையான, பாதுகாப்பான மற்றும் நிலையான நகர்ப்புற போக்குவரத்து அமைப்பை உருவாக்குவதையும் முக்கிய நோக்கமாகக் கொண்டுள்ளது. ’

இந்நிகழ்ச்சியில், போக்குவரத்து மற்றும் மின்சாரத்துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர், பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி ஆர்.பிரியா, நாடாளுமன்ற உறுப்பினர் தயாநிதி மாறன், போக்குவரத்துத் துறை அரசு முதன்மைச் செயலாளர் சுன்சோங்கம் ஜடக் சிரு, மாநகர் போக்குவரத்துக் கழக மேலாண் இயக்குநர் டாக்டர் த.பிரபுசங்கர், சென்னை போக்குவரத்து காவல் கூடுதல் ஆணையர் இ.கார்த்திகேயன், துணை மேயர் மு.மகேஷ்குமார், நிலைக்குழுத் தலைவர் (பணிகள்) நே.சிற்றரசு, மாநகர் போக்குவரத்துக் கழக விளம்பர தூதர் கிரிக்கெட் வீராங்கனை திருமதி திருஷ்காமினி, மண்டல குழுத் தலைவர் எஸ்.மதன்மோகன், மாநகர் போக்குவரத்துக் கழக இணை மேலாண் இயக்குநர் இராம. சுந்தரபாண்டியன், உயர் அலுவலர்கள் மற்றும் தொழிற்சங்க பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.



சென்னை தெற்கு மாவட்டம் சைதை கிழக்கு பகுதி திமுக சார்பில் இளைஞர் எழுச்சி நாளை முன்னிட்டு தலைமுறைகள் வாழ்த்தும் தலைவன் என்கிற தலைப்பில் குருநானக் கல்லூரி வளாகத்தில் அமைச்சர் மாவட்டச் செயலாளர் மா.சுப்பிரமணியன் முன்னிலையில் பகுதிச் செயலாளர் இரா.துரைராஜ் எம்.சி. தலைமையில் நடைபெற்ற கருத்தரங்கில் டாக்டர் காந்தாராஜ், ராஜகம்பீரன், பேரலை இந்திரகுமார், சுபேர் ஜமால் ஆகியோர் கருத்துரை வழங்கினர். உடன் எஸ்.அரவிந்த்ரமேஷ் எம்.எல்.ஏ. ஏ.எம்.வி.பிரபாகர்ராஜா எம்.எல்.ஏ. துணை மேயர் மு.மகேஷ்குமார், மின்னல் கந்தப்பன், தா.மோகன்குமார் எம்.சி. நேருநகர் எஸ்.பாட்சா வே.முருகன், வழக்கறிஞர் இரா.கோகுலன் உள்ளனர்.

## அமைச்சர் பி.கே.சேகர்பாபு முன்னிலை! இ. சூர்யா தலைமை!

# எழும்பூர் தெற்கு பகுதி இளைஞரணி சார்பில் 1085 குடும்பங்களுக்கு நல உதவிகள்!

## அமைச்சர் தா.மோ. அன்பரசன் - நடிகர் கருணாஸ் வழங்கி சிறப்புரை!

*சென்னை,நவ.23*

*சென்னை கிழக்கு மாவட்டம் எழும்பூர் தெற்கு பகுதி திமுக இளைஞரணி சார்பில் உதயம் 8 நெஞ்சில் உதயம் குடியிருப்பு! நேர்மை நமது உயிர்த்துடிப்பு என்ற தலைப்பில் நகர்புற வாழ்விட மேம்பாட்டு வாரிய குடியிருப்பு மறுக்கட்டுமான பணி நடைபெறுகின்ற குடியிருப்பில் வசித்த 1085 குடும்பங்களுக்கு நல திட்டங்கள் வழங்கும் விழா. இன்று (23.11.2025) ஞாயிற்றுக்கிழமை மாலை 5.00 மணிக்கு பி.கே.என். ஆடிட்டோரியம் (அனிதா பள்ளி வளாகம்) வேப்பேரியில் மாவட்டச் செயலாளர் அமைச்சர் பி.கே. சேகர்பாபு முன்னிலையில், எழும்பூர் தெற்கு பகுதி இளைஞர் அணி துணை அமைப்பாளர் இ.சூர்யா தலைமையில் நடைபெறுகிறது.*

*இதில் அமைச்சர் தா.மோ.அன்பரசன், முக்குலத்தோர் புலிப்படை தலைவர் நடிகர் கருணாஸ் ஆகியோர் நல உதவிகளை வழங்குகின்றனர்.*

*இதில் பகுதி செயலாளர் வி.சுதாகர், சொ.வேலு எம்.சி. கோ.ஏகப்பன், ப.ஸ்ரீராமுலு எம்.சி., கே.எஸ்.எம். நாதன், வானவில் விஜய் பரிதிஇளம்சுருதி எம். சி., ராஜேஸ்வரி ஸ்ரீதர் எம்.சி., அ.நிர்மலாதேவி, எல்.சுந்தர்ராஜன் எம்.சி., ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.*

*இதில் இளைஞர் அணி நிர்வாகிகள் ஜெ.பாலமுருகன், க.வினோத், பா.ஜெகதீஷ், ஜி.ஜெ.பிரபு, எஸ்.தனசேகர், ஆர்.டி.சங்கர் நானா, சே.பாலாஜி, த.ஜெயக்குமார், பா.சங்கர், அ.அவினாஷ், லோ.சுகுமாறன், ரா. கார்த்திக், மு.முகம்மது பிலால், ஜெ.சிலம்பரசன் ஆகியோர் வரவேற்கின்றனர்.*

*இந்நிகழ்ச்சியில் மேயர் பிரியா, தயாநிதி மாறன் எம்பி, சட்டமன்ற உறுப்பினர்கள் ப.தாயகம்கவி , இ.பரந்தாமன், ஜோசப்சாமுவேல், அ.வெற்றிஅழகன், மற்றும் பி.எம் யாழினி, கே.எஸ்.இரவிச் சந்திரன், எஸ்.மணிமுடி, தமிழன்பிரசன்னா, வே.உமாகாந்த், எஸ்.ரசூல், டி.வி.வேலு, எம்.மலர்மாறன், கே.அன்னபூரணி, எஸ்.ஜெகதீசன், எம்.தில்லைகுமார், பி.சி.சம்பத்குமார், ஜெ.கே.கருணாகரன், கே.வள்ளி, சூளைசுப்பராயலு, வி.விஜயகுமார், ஆர்.பாபு(எ)சந்திரசேகரன், எஸ்.டால்பின் ஹறி, இ. மொய்தீன், வான்மதி கதிரவன், தி.தயாளன், வி. அயாய், சு.மனோகர், ந. பாலு, ஆர்.எம்.ரங்கநாதன், சி.சேகர் உள்ளிட்ட கழக நிர்வாகிகள் பங்கேற்கின்றனர்.*

*ரோ.சந்தோஷ் குமார் நன்றி கூறுகிறார்.*



திரு.வி.க நகர் தொகுதிக்குட்பட்ட வார்டு எண், 71 மற்றும் 72 ஆகிய பகுதிகளுக்குட்பட்ட வாக்குச்சாவடி மையங்களுக்கு வழக்கறிஞர் ப. தாயகம்கவி, எம். எல். ஏ., தொகுதி தேர்தல் பார்வையாளர் தண்டலம் என்.கிருஷ்ணமூர்த்தி ஆகியோர் வாக்குச்சாவடி மையங்களுக்கும் நேரில் சென்று பொதுமக்களிடம் பெறப்பட்ட வாக்காளர் சேர்ப்பு படிவங்களை ஆய்வு செய்தனர்.

